தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2019 கும்பம் (20-2-1988) பிப்ரவரி-88 85 காசுகள் (இதழ் எண்: 100)

தமிழ் நாட்டு அரசியல் குழப்பத்தால் தமிழீழப் போராட்டம் அடக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சப்படுகிறது!

தமிழகத்தில் அரசியல் மோதல்களைத் தூண்டிவிட்டுத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அடக்கப் பார்க்கிறது, இந்திய அரசு!

தேடுதல் சாக்கில் விடுதலைப் புலிகளை ஒடுக்கவும் அழிக்கவும் பார்க்கிறார் இராசீவ்!

கிடுக்கிப் பிடியில் சிக்கித் தவிக்கிறது தமிழினம்!

அனைத்துக்கும் ஒரே முடிவு தமிழக விடுதலையை முன்னெடுத்துப் போவதே'

உண்மையான தமிழின நலம் கருதும் தமிழகத் தலைவர்கள் உணருவார்களா?

இளைஞர்களின் கையில் எதிர்காலத் தமிழகம்!

தமிழீழத் தமிழர்களுக்கு நாளுக்கு நாள் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. போராளிகளைத் தேடுகின்ற முயற்சியில் இந்தியப் படை, போராளிகளை அடியோடு அழித்தொழிக்க முற்பட்டு விட்டது. இது தொடர்பாகத் தமிழக மக்களின் கவனம் திசை திருப்பப்படும் நோக்கத்தில், இங்குள்ள அரசியல் கட்சிகளிடையே பூசல்களையும் போராட்டங்களையும் தூண்டிவிட்டுத் தமிழகத்தின் அரசியல் கட்டுக் கோப்பைச் சீர்குலைக்க

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

ஐயோ தமிழர்களே !

பெண் புலிப் பாய்ச்சல்!

எம். சி. ஆர். 8 அடி பாய்ந்தால், புரட்சித்தலைவி 16 அடி பாய்வார்.

— முன்னாள் அமைச்சர் இரா. சவுந்தரராசன்.

அடக்கி வையுங்கள்!

செயலலிதாவின் பேச்சுகள், நடவடிக்கைகள் விரும்பத்தக்கவை அல்ல. அவர் எதற்கெடுத்தாலும் தலைமையமைச்சர் பெயரைப் பயன்படுத்துகிறார். தலைமையமைச்சர் பெயரைக் களங்கப்படுத்துகிறார். ஆளுநரை மிரட்டும் வகையில் பேசியிருக்கிறார். அவரைப் பதவி நீக்க வேண்டும் என்கிறார். அவைத்தலைவரைச் சிறையில் தள்ள வேண்டும் என்கிறார். புது ஆளுநருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்படும் என்று பேசுகிறார். அவர் ஐ. ஏ. எசு. அதிகாரிகளையும் உயர் அதிகாரிகளையும் மிரட்டுகிறார். அவர் தலைமையமைச்சரின் பெயரைப் பயன்படுத்துவதால் அதிகாரிகள் அச்சப்படுகிறார்கள். செயலலிதா தம்மை முதல் அமைச்சராக நினைத்துக் கொண்டு செயல்படுகிறார். இவர் நடவடிக்கையைத் தமிழக மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். எனவே தகுந்த நடவடிக்கை எடுத்து அவரை அடக்கி வையுங்கள்.

— தி. மு. க. துணைப் பொதுச் செயலர் நாஞ்சில் மனோகரன்.

செயலலிதா முதலமைச்சரா?

செயலலிதா தான் அடுத்த முதலமைச்சர் என்று அவருடைய ஆதரவு முன்னாள் அமைச்சர்களான பண்ணுருட்டி இராமச்சந்திரன், திருநாவுக்கரசு, சாத்தூர் இராமச்சந்திரன், இரா. சவுந்தரராசன் ஆகியோர் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

— செய்தி.

நெடுஞ்செழியனுக்கு பட்டைநாமம்!

இப்பொழுது எம். சி. ஆருக்கு இருந்த மக்கள் ஆதரவு செயலலிதாவிற்கு இருக்கிறது. அதில் ஐயம் இல்லை. ஒரு பொதுவான கருத்துப் படி நெடுஞ்செழியனை முதல் அமைச்சராகத் தேர்வு செய்தனர், இப்பொழுது அந்தப் பொதுவான கருத்து மேலும் தொடர வாய்ப்பே இல்லை.

— பண்ணுருட்டி இராமச்சந்திரன்.

நல்ல சமயமடா! இதை நழுவ விடுவாயோ?

'எம். சி. ஆர்.' மறைவைத் தொடர்ந்து அ. தி. மு. க. இரண்டாக உடைந்தது. அ. தி. மு. க. ஆட்சியும் கவிழ்ந்து விட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சியும் நடைமுறையில் உள்ளது! எனவே தமிழ்நாட்டில் இந்திரா பேராயம் 'ஆட்சியைக் கைப்பற்ற இதுதான் சமயம். இதைத் தவறவிட்டால், அதற்கு மீண்டும் வாய்ப்பே இல்லாமல் போய் விடும்' என்று தமிழகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராசீவிடம் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

— இந்திரா பேராய ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் கே. கருணாகரன்.

அடுத்த முதலமைச்சர் யார்?

தமிழ்நாட்டில் அடுத்த முதல்வராகும் வாய்ப்பு யாருக்கு அதிகமாக இருக்கிறது. — என்று, பம்பாயிலிருந்து வெளிவரும் 'சண்டே அப்சர்வர்' என்னும் ஆங்கில நாளிதழ் சென்னையில் உள்ள மக்களிடம் ஒரு கருத்தெடுப்பு நடத்தியது. அதில், இந்தக் கருத்தெடுப்பில் கலந்து கொண்டவர்கள் 31 விழுக்காட்டினர் தி. மு. க. தலைவர் கருணாநிதியையும், 18 விழுக்காட்டினர் செயலலிதாவையும், 15 விழுக்காட்டினர் நெடுஞ்செழியனையும், 8 விழுக்காட்டினர் சானகி இராமச்சந்திரனையும், 3 விழுக்காட்டினர் வீரப்பனையும், 2 விழுக்காட்டினர் மூப்பனாரையும், 2 விழுக்காட்டினர் பண்ணுருட்டி இராமச்சந்திரனையும், 2 விழுக்காட்டினர் சிவாசிகணேசனையும் ஆதரித்துக் கருத்துக் கூறியதாகத் தெரிகிறது.

— செய்தி.

சாம்பால் பள்ளத்தாக்குக் கொள்ளையர்கள்.

தமிழ்நாடு அரசுக் கருவூலம் காலியாகிவிட்டது — என்று செய்தியிதழ்களில் செய்தி வருகிறது. அது காலியாகிற அளவுக்கு ஊதாரித்தனமாகச் செலவுகள் செய்யப் பட்டுள்ளன. அமைச்சர்கள் தொலைபேசிச் செலவு, பயணச் செலவு, பாதுகாப்புச் செலவு என்றெல்லாம் பணம் அள்ளி விடப்பட்டுள்ளது. ஒழுங்காக அரசுக் கருவூலத்திற்குப் போய்ச் சேர வேண்டிய பணம், அமைச்சர்களின் இரும்புப் பெட்டிகளுக்குச் சென்றுள்ளது. இன்றைக்குச் சொல்லப் படுவதைப் பார்த்தால் பேருந்துச் செய்தியில் மட்டும் 15 கோடி உருபா அளவிற்குக் கையூட்டு வாங்கியிருப்பதாகச் செய்தி வருகிறது. எம். சி. ஆர். உயிர்பிரிந்து அவர் உடல் இராமவரம் தோட்டத்திலிருந்து இராசாசி மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப் படுகையில் ஓர் அமைச்சரிடம், வீட்டு வசதி வாரியத்திலே ஒரு சலுகை பெறுவதற்காக ஏழு இலக்க உருபா கையூட்டுப் பெற்றிருக்கிறார். கையூட்டை வாங்கி அவர் தம் வீட்டிலுள்ள இரும்புப் பெட்டியிலே அந்தத் தொகையைப் பாதுகாப்பாக வைத்து விட்டு வந்து, எம். சி. ஆர். உடல் கிடத்தப்பட்டுள்ள இடத்திற்கு வந்து, "அண்ணனே! பொன்மனச் செம்மலே!

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வும், தேர்தலைப் படிப்படியாகத் தள்ளிப் போடவும், குடியரசுத் தலைவர் ஆட்சியைத் தொடர்ந்து நீடிக்கவும் உறுதி செய்து கொண்டு, செயல்படுகிறது இராசீவ் அரசு!

தங்களுக்குச் சார்பான நிலை தோன்றும் வரை, அஃதாவது இந்திரா கட்சிக்கு ஆட்சித் தலைமை கிடைக்கும் வரை, நிலைகளைத் தளர விடாமல், இதுதான் சரியான நேரமென்று கருதித் தமிழ் நாட்டில் தொடர்ந்து குழப்பங்களை உருவாக்கிக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறார் இராசீவ்.

அவருக்கு அ. தி மு. க. வோ, வேறு கட்சிகளோ முக்கியமை அல்ல. அ.தி மு.க. வில் அமைதி ஏற்படவில்லையானால், அடுத்து தி மு. க. தான் ஆட்சிக்கு வரும் என்று கணித்து, தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட இனத்தை ஆட்சிக் கட்டில் ஏற விடாமல், மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுகிறார் இராசீவ். தமிழகம் அமைதியுறுவதோ, தமிழக மக்கள் நலமுடன் வாழ்வதோ அவருக்கு நோக்கமாகத் தெரியவில்லை. தமிழினத்தை இந்தக் காலகட்டத்திலேயே மீண்டும் தலையெடுக்காமல் செய்துவிட வேண்டும் என்பதே அவரின் தலையாய நோக்கமாகத் தெரிகிறது.

இதற்கெனத் தமது கைக்கூலியாகச் செயல்படும் செயலலிதா அணியைத் தூண்டி விட்டு, மக்களிடம் அரசியல் குழப்பங்களையும் ஆட்சி வெறுப்புத்தனங்களையும் ஏற்படுத்த முயல்கிறார் தலைமை அமைச்சர் இராசீவ். தமிழினத்தைப் பொறுத்த மட்டில் இந்திராவை விட நூறு பங்குக் கொடியவர் இவர். தமிழினத்தை மேலேறவே விடக்கூடாது என்னும் தமது கரவான திட்டத்தை இக் கடுமையான நேரத்தில் செயல்படுத்தவும். நிலைப் படுத்தவும் பார்க்கிறார்.

தமிழகத்தின் இத்தகைய அரசியல் சூறுவளித் தனங்களுக்கிடையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பூண்டோடு அழித்தொழிக்கவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தேடிப் பிடித்துக் கொலை செய்யவும், அங்குள்ள இந்தியப் படைகளைத் தூண்டி விட்டிருக்கிறார்.

இந்நிலையில், இங்குள்ள அ. தி. மு. கவினர் தங்களுக்குள் பூசல்களையும், போராட்டங்களையும் மிகுத்துக் கொண்டு, ஓர் அணியை ஓர் அணி ஒழிக்கவும் அழிக்கவும், அரசியல் சட்டநிலைகளில் சிக்க வைக்கவும் இராசீவுக்குக் காவு கொடுக்கவும் முற்பட்டு முவ்வுரமாகச் செயல்பட்டு வருகின்றனர். நாள்தோறும் ஒருவருக் கொருவர் ஏசிப் பேசுவதும், குற்றஞ் சாட்டிக் கொள்வதும், தாங்கள் முன்பு ம. கோ. இரா. காலத்தில் மறைமுகமாகச் செய்து வந்த சட்ட மீறல்களையும், வஞ்சகத் தனங்களையும், கரவுச் செயல்களையும், ஊழல்களையும், குமுகாயக் குற்றங்களையும் ஒருவர் மேல் ஒருவர் வெளிப்படுத்திக் கொள்வதும், சொல்லளவில் சேற்றையும் குப்பைகளையும் வாரி வீசிக் கொள்வதையும் காணவும் கேட்கவும் பொறுக்க முடியவில்லை. இவற்றுக்காகத் தமிழினத்தில் பிறந்ததற்கும், தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கும், வெட்கமும் துயரமும் பட்டுத் தலை குனியவும் வேண்டியிருக்கிறது!

இப்பொழுதுள்ள அரசியல் இழிவில், அன்புக்கோ பண்புக்கோ, அறத்துக்கோ, அறிவுக்கோ இங்கு வேலையில்லை என்பதால், பொதுநலம் கருதும் தூய தொண்டுள்ளம் கொண்ட நம் போன்ற அனைவரும், அடங்கி ஒடுங்கி வாயடைத்துக் கிடக்க வேண்டியுள்ளது.

கடந்தகால வரலாற்றில் தமிழினம் எத்தனையோ இருண்ட காலவரலாறுகளைச் சந்தித்திருக்கிறது. எனினும் இப்படிப்பட்டதோர் இழி நிலையை இப்பொழுதுதான் இந்தப் புண்மனச் செம்மல் ம. கோ. இரா. காலத்தில்தான் எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இது வரலாற்றில் மிக மிக வெட்கக்கேடான காலம். தங்களைக் கடந்த காலங்களில் வெண்ணெய் வெட்டி வீரர்கள் என்றும் மறவர்களென்றும் வீம்புக்காகப் பேசிய விரகர்கள் இன்று கயமைக் களத்தில் மலத்தை வாயிலிட்டு அதக்கித் துப்பும் சொற்சிலம்பமும், தாங்கள் காசுக்கு விலைபோய் அரசியல் கற்பைப் பறிகொடுத்த இழிநிலை மல்லாட்டங்களும், அரம்பக் களரிகளும் ஆடிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் வீர சூர வெட்டித்தனங்களைப் பார்த்துத் தமிழர்களின் பண்பாட்டு விளக்கமாகிய திருக்குறளின் அறிவுரைகளும், கழக இலக்கிய வீர வரலாறுகளும், சைவ, வைணவ சமய மெய்ப்பொருள் சான்ற தேவாரத் திருவாசகத் திருப்பாவை நல்லிசைப் பாக்களும் நாணி நடு நடுங்கிக் கோணிக் குறுகிப் போய் விட்டன போல் நமக்குப் படுகிறது.

எப்படியும் ஒட்டு மொத்தத்தில் தமிழின வரலாறும், தமிழின வீறும் மிகமிகக் கீழ்மையுற்று நெடுஞ் சாண் கிடையாகச் சரிந்து சாய்ந்து கிடக்கிறது. இது தான் நல்ல சமயமென்று கருதும் இராசீவுகளும், அவர்களுக்குத் துணைபோகும் மூப்பன்களும், சிதம்பரங்களும், பழனியாண்டிகளும் ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிடப் உள்வேர்த்துத் காலம் பார்த்துக் கிடக்கின்றனர். இவ்வனைத்து நிலைகளுக்கும் ஆன ஒரே தீர்வு தமிழக விடுதலையை நாம் முன்னெடுத்துப் போவதே! இதை உண்மையான தமிழின நலம் கருதும் தமிழகத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளுவார்களா? அவர்கள் அவ்வாறு உணரத் தவறினுல் இளைஞர்கள் இதைக் கையெடுத்துக் கொள்வார்களா? எப்படியோ இளைஞர்களின் கையில்தான் எதிர்காலத் தமிழகம் இருக்கிறது! 0

போலி ஒருமைப் பாடுகளைப் புறக்கணிப்போம்! கொத்தடிமைத் தனத்திலிருந்து விடுபடுவோம்!

மகிபை -- பாவிசைக்கோ.

"வடவர் நம்மவரும் அல்லர்; நல்லவரும் அல்லர்" என்னும் உண்மையை உணராமல் உங்களை "இந்தியர்கள்" என்று கருதி ஏமாறிக் கொண்டிருக்கும் இளிச்சவாய்த் தமிழர்களே!

வஞ்சகமே வடிவெடுத்த இந்தி(ய) நடுவணரசு, ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கத்தான் அங்கே அமைதிப் (?) படையை அனுப்பியது என்று இன்னும் கூட நம்புகிறீர்களா? அப்படியானால்,

சார்க் மாநாட்டின்போது தீட்டப்பட்ட சூழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் மீது பொருளியல் முற்றுகையிடும்படி சிங்களவனைத் தூண்டிவிட்டதே இந்தி(ய) நடுவணரசுதான் என்பதும், பட்டினி முற்றுகைக்கும் பணிய மறுத்துவிட்ட யாழ்குடா மக்கள் மீது குண்டுவீசிக் கொல்லும்படி கருத்துக் கூறியவர்கள் வல்லாண்மை வெறிபிடித்த தில்லிக் கள்ளர்களே என்பதும் உங்களுக்குத் தெரியாதா?

கொழும்பு நகரில் ஒரே ஒரு குண்டு வெடித்ததற்கே குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டுப், புலிகளின் மீது பழிசுமத்திய தில்லிக்காரன், வடமராச்சி மக்கள் மீது ஆயிரக்கணக்கான குண்டுகள் பொழியப்பட்டபோது "யாருக்கோ வந்த இழவு" தானே என்று வாய் மூடிக்கிடந்ததும்,

அதன்பிறகு புற அழுத்தங்கள் அதிகமானவுடன், வேண்டா வெறுப்பாகக் "குண்டு வீச்சைக் **குறைத்துச்** கொள்ளுங்கள் என்றுமட்டும் கூறினானே தவிரக் குண்டு வீசுவதை **நிறுத்திச்** கொள்ளுங்கள் என்று ஒருபோதும் கூறவில்லை என்பதும் உங்களுக்கு மறந்துவிட்டனவா?

சிறைகளில் அடைபட்டிருந்த தமிழர்களில் 40 பேர்களுக்கு மொட்டையடித்துப் பவுத்த பிக்குகள் என்று அவர்களை **விளம்பரப்படுத்தி** அவர்கள் ஒட்டுமொத்தமாகச் சுட்டுத் தள்ளும்படியும், அந்தப் பழியை விடுதலைப்புலிகள் மீது போடும்படியும் சிங்களவனுக்குக் கருத்துச் சொன்ன படு இழிஞனே **இந்தியத் தூதர் (தீட்சித்)**தான் என்பது உங்களுக்குத் தெரியாதா?

அதன் பிறகுதான் கொக்கட்டிச் சோலைப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் குடும்பம் குடும்பமாக வேட்டையாடப் பட்டார்கள் என்பதும், அந்தப் பகுதியின் தளபதிதான் இந்தி(ய) நாய்களால் காட்டிக் கொடுக்கப்பட்ட "கடல் புறா"வில் பயணம் செய்த குமரப்பா என்பதும், இப்போது அந்தப் பகுதி சிங்களவர் குடியிருப்பாக ஆக்கப்பட்டு **இந்தியக் கூலிப்படைகளால்** காவல் காக்கப்பட்டு வருகிறது என்பதும் உங்களுக்குத் தெரியாதா?

ஏராளமான ஆயுதங்களுடன் கொழும்புக்குச் சென்ற வெளிநாட்டு வானூர்திக்குத் திருவனந்தபுரத்தில் எரிபொருள் வழங்கித் தடபுடலாக வழியனுப்பி வைத்த சூட்டோடு சூடாக 'இந்தக் கருவிகளின் மீது **தமிழர்களைக் கொல்வதற்காக**' என்று எழுதியா வைத்திருக்கிறது என்று "**தெருச் சுற்றியை**"ப் போல் "திமிருரை" செய்த பழிகாரர்தாம் இராசீவ் என்பது உங்களுக்கு அதற்குள் மறந்து போய்விட்டதா?

இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்புவது முட்டாள்தனம் என்றும், அப்படி அனுப்பினால் அமெரிக்கன் வந்து இந்தியன் தலை மீது குண்டு வீசிவிடுவான் என்றும் "பெட்டைத்தனமாகப்" புலம்பிய அந்நாள் பாதுகாப்பு அமைச்சரும், இந்நாள் "குடிநாயகரு"மான வெ(க்க)ங்(ெ)கட்(ட)ராமனின் தலைமீது (இந்தியப் படை இலங்கைக்குள் நுழைந்து இரண்டுமாதம் ஆகிய பிறகும் கூட) அமெரிக்கக் குண்டுகள் எதுவுமே விழாதது ஏன் என்று புரிகிறதா?

இந்தியக் கூலிப்படை இப்போது இலங்கைக்குச் சென்றிருப்பது, அமெரிக்காவின் நண்பனான **செயவர்த்தனாவைக் காக்கவும்**, செயவர்த்தனாவின் எதிரியான பிரபாகரனைத் தாக்கவும்தான் என்னும் உண்மை இப்போதாவது விளங்குகிறதா?

இலங்கையை இந்தியாவின் 24-ஆவது மாநிலமாக ஆக்கிவிட வேண்டும் என்று ஓயாமல் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்த சுப்பிரமணியம் சுவாமி போன்ற அமெரிக்க அடிவருடிகள் இப்போது "சோவியத்து அடிவருடி"யான இராசீவின் அடிகளையும் சேர்த்து வருடிவிடுவதற்குக் காரணமே பிரபாகரனின் விடுதலைப் படைமீது, இந்தியக் கூலிப் படைகளை 'ஏவி' விட வேண்டும் என்னும் ஆவல் நிறைவேற்றப்பட்டதால்தான் என்பதை உங்களால் உணரமுடிகிறதா?

உலக வரலாற்றிலேயே முதல்முறையாக ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் **திலீபன்** (காத்திய முறையில்) நடத்திய பட்டினிப் போரை இந்தியத் தூதர் தீட்சித்திலிருந்து இந்திரா குடும்பத்துக் கொத்தடிமையான டி — ஆர் — ஆர்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

உங்களுக்குத் தெரியுமா?

'இந்தி'யும் 'உருசிய'மும் இரண்டு இணைமொழிகள்!

நடுவணரசு படைத்துறை அமைச்சகத்தின் பொறுப்பில் ஓர் அயல்நாட்டு மொழிகளின் கல்லூரி இயங்குகின்றது. இந்தக் கல்லூரியில் ஏறத்தாழ 19 அயல்நாட்டு மொழிகளைக் கற்பித்து, ஆண்டில் ஏறத்தாழ 240—250 மாணவர்களுக்கு நற் சான்றிதழ்கள் தரவிருக்கிறார்கள்.

45 - 50 அகவையுள்ள மூத்த நடுவணரசு அதிகாரிகள் தாம் இந்தக் கல்லூரியின் மாணவர்கள். படைத்துறை அதிகாரிகள் பலர் இங்கு மாணவர்களாகி உள்ளனர். நடுவணரசு ஊழியர்கள் மட்டுந்தாம் இந்தக் கல்லூரியில் மாணவர்களாய்ச் சேர முடியும்.

இந்தக் கல்லூரியில் பிரஞ்சு, இத்தாலி, சீனம், சப்பான போன்ற மொழி வகுப்புகள் நடத்தப் படுகின்றன. இந்த வகுடபுகளுக்கு ஏறத்தாழ 10 - 15 பேர்கள்தாம் வருகிறார்கள்.

உருசிய மொழி வகுப்பில்தாம் அதிக மாணவர்கள் 40-45 பேர் வரை பயிலகிறார்கள். உருசிய மொழிகற்றுக் கொள்ள 18 மாதங்கள் தேவை. நடுவண் அரசு உயர் அதிகாரிகளுக்கு, குறிப்பாக படைத்துறை மற்றும் ஐ. பி. எசு. அதிகாரிகளுக்கு, உருசிய மொழியில் 'புலமை' இருந்தால் உடனடியாகச் சம்பளத்தை உயர்த்தித் தருகிறது நடுவண் அரசு. அதனால்தான் உருசிய மொழி வகுப்பில் மட்டும் ஏகப்பட்ட கூட்டம்.

நடுவணரசுப் பணிகளில் இந்தி மொழிக்குக் கொடுக்கப்படும் அளவுக்கு, உருசிய மொழிக்கும் முகாமை தரப்படுகிறது.

நடுவணரசின் 56 துறைகளிலிருந்தும், லோதி எசுடேட்டில் இருக்கும் இந்த அயல் நாட்டு மொழிக் கல்லூரிக்கு 'ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகள்' அடங்கிய கமுக்கக் கோப்புகள், குவிந்து விடுகின்றன இவை அனைத்தும் உருசிய மொழியில்தாம் இருக்கின்றன. உருசியர்கள் தங்கள் ஒப்பந்தங்கள் அனைத்தையும் உருசிய மொழியில்தான் வைத்திருப்பார்கள். அவர்கள் ஆங்கில மொழி பெயர்ப்பைத் தருவதே இல்லை.

நடுவணரசின் ஒவ்வொரு துறையும். இறக்குமதி ஏற்றுமதி, மேற்படிப்பு, விலைக்கு வாங்குவது, விலைக்குத் தருவது. என்று உருசிய நாட்டுடன் ஏதாவதொரு வகையில் தொடர்பு வைத்துத் துள்ளன. அதனாலேயே உருசிய மொழி தெரிந்த மொழிபெயர்ப்பாளர்களின் தேவை அதிகமாகி விட்டது.

ஒரு சில நடுவணரசுத் துறைகள் குறிப்பாக வணிகம், கலைப் பண்பாடு. வேளாண்மை, அறிவியல் தொழில் அராய்ச்சி போன்ற துறைகள், அண்மைக் காலமாக, நடுவணரசிடம் சிறப்பு இசைவு பெற்று, உருசியமொழி தெரிந்த ஒருவரைத் தங்கள் துறைகளில் பணிக்கு எடுத்துக் கொண்டுள்ளன.

அயலுறவுத் துறை, பாதுகாப்புத் துறைகளில் மட்டுமே உருசியமொழி தெரிந்தவர்கள் 30 விழுக்காட்டுப் பேர்கள் இருக்கிறார்கள். (கிரெம்ளினில் உள்ள உருசிய அயலுறவுத்துறை அலுவலகத்தில் இந்தி தெரிந்தவர்கள் 30 விழுக்காட்டுப் பேர்கள் கூட இல்லை.) இந்த இரண்டு துறைகளிலும் உருசிய மொழிதான் அதிகம் பயன்படுத்தப் படுகின்றது. மற்றநாட்டு மொழிகள் அனைத்தும் சேர்ந்தால் கூட, 20, அல்லது 25 விழுக்காட்டுக்கும் குறைவாகத்தான் இருக்கும்.

அயலுறவுத்துறை (ஐ. எப். எசு) அதிகாரிகளுக்குக் குறைந்த அளவு ஓர் அயல்நாட்டு மொழி யாவது தெரிந்திருக்க வேண்டும். பெரும்பாலான அயலுறவுத் துறை அதிகாரிகள் உருசிய மொழியையே சிறப்புப் படிப்புக்காகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

ஆக தில்லியில் உருசியமொழி தெரிந்தவர்களின் எண்ணிக்கை, உருசிய மொழி படிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகிகொண்டு வருகிறது. இந்த முன்னேற்றம் நல்ல அறிகுறிதானா என்பது ஐயமே! நம் நாட்டில் இந்தியின் வல்லாண்மையைக் குறை கூறிச் சுட்டிக் காண்பிப்பதுபோன்று, மேல் மட்டத்திலுள்ள சிலர், 'உருசியமொழி' வல்லாண்மையை வளர விடுவது தவறு என்று வழக்காடுகிறார்கள். இதற்கு நாம் உதவக் கூடாது என்கிறார்கள், அவர்கள்.

இந்தியையோ அல்லது வேறேதாவதோர் இந்திய மொழியையோ பயில்வதில் உருசியர்கள் இதே அளவுக்கு ஆர்வம் காட்டுகிறார்களா என்ற கேள்விக்கு விடை கூற யாராலும் முடியாது.

இந்தியாவில் நடைபெறும் உருசிய விழாவும், உருசியாவில் நடைபெறும் இந்திய விழாவும் முடிந்தபின், இரண்டு நாடுகளுக்குமிடையில் உள்ள உறவு அதிகமாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவுக்கு வரும் அயலகச் சுற்றுலாக் காரர்களில் உருசியர்களே கூடுதலாக வருகிறார்கள். உருசியாவிலிருந்து ஆண்டுக்கு 16 — 17 ஆயிரம் பேர்கள் வருகிறார்கள. இத் தொகை 1984-க்குப் பின்னர்தான் (இந்திரா ஆட்சியில்தான்) இவ்வளவு அதிகமாகியுள்து - (1970 முதல் 1979 வரை இந்தியா வந்துபோன உருசியர்களின் எண்ணிக்கையே ஏறத்தாழ 4000க்கும் குறைவுதான்.)

ஆனால், அதே சமயம், உருசியாக்காரர்கள் இந்தியாவிற்கு வருவதைவிட அந்தமான், நிகோபாருக்குத்தான் அதிகம் செல்லுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பது மட்டும யாருக்கும் தெரிய வில்லை.

நன்றி - அடிப்படை — 'தினமணிக்கதிர்' 17-1-88

இந்தி(ய) வல்லரசுதான் தமிழினத்தின் முதல் எதிரி.

ஓர் உயிரைப் பிடித்து இரையாக்கி விழுங்குகிற முதலையின் கண்களில் சொட்டு சொட்டாக நீர் கொட்டுமாம்! இதுதான் முதலைக் கண்ணீர். இந்தி(ய) ஆட்சிக்குள் அடங்கிய சீக்கியர்கள் உரிமை கேட்டுக் கிளர்ந்து எழுந்தனர். வடகிழக்கிலுள்ள சில தேசிய இனங்கள் தனி நாடு கேட்டுப் போராடத் தொடங்கின. இவர்களை எல்லாம் தன்னுடைய கூலிப் படைகளின் வன்முறையால் இநதிய வல்லரசு அடக்கியொடுக்கி வருகிறது. சிங்களப் பேரின வெறி ஈழத் தமிழரை ஒழித்துக் கட்ட பார்ப்பதைப் மட்டும் பார்த்துக் கண்ணீரைக் குடம் குடமாகக் கொட்டி வந்தது. இதுவும் முதலைக் கண்ணீர்தான் என்பது இன்று வெட்ட வெளிச்சமாகி விட்டது.

நம்மில் சிலர் அன்றே சொன்னோம். "நயவஞ்சகம் மிக்க நரிதான் இந்தியா: அதனால் யாரை நம்பினாலும் இந்தியாவை மட்டும் நம்பாதீர்!" என வந்துபோன ஈழப் போராளித் தலைவர்களைப் பார்த்தபோதெல்லாம் சொல்லத்தான் செய்தோம். இந்தியன் கண் சிமிட்டிய போதெல்லாம் சிங்களப் படைகள் தமிழர்களைத் தாக்கத் தொடங்கின. வடமராட்சி மீது சிங்களப் படைகள் நடத்திய தாக்குதல் ஒன்றே இதற்குச் சான்று சொல்லும் தமிழீழப் போராளிகளோ இந்தியனிடம் அகலாது, அணுகாது தீக்காய்வதை விட்டு, அவனை ஒரு பெரிய நண்பன் என முன்னர் போட்ட கணக்கை உடனே மாற்றிக் கொள்ள முடியாத நிலையில் சிக்குண்டு கிடந்தனர். இந்தக் கணக்கு அவர்களுடைய அரசியல் படைத்துறை உத்திகளுக்கு ஒரு பற்றுக்கோடாக இருந்து வந்தது ஒரு பெரிய தவறாகிவிட்டது.

தமிழினத்தை வெறும் சோற்றாலடித்த பிண்டமாகக் கருதி வருகிறான் இந்தி(ய) ஆளவந்தான். யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு வடமாரட்சி போன்ற பகுதிகளைச் சிங்கள இனவெறிப் படை தாக்கத் தொடங்கியபோது வானத்திலிருந்து சோற்றுப் பொட்டலத்தைப் போட்டு விட்டு வந்தான் இந்தி(ய)ன்! தமிழரின் இனமான உணர்வுக்கு அந்த சோற்றுப் பொட்டலம் ஒரு விலையா? பின்னர் செயவர்த்தனாவுடன் திரைமறைவுப் பேச்சுகளில் இறங்கியது. இந்திய வல்லரசு சோற்றைக் காட்டிக் கொண்டே தமிழீழத்திற்குள் இந்தியப் படைகள் ஊடுருவின. அழைப்பை ஏற்று வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை தில்லியில் சிறை வைத்துவிட்டு, **இந்திய-இலங்கை ஒப்பந்தம்** என்னும் இழவு ஒப்பந்தத்தை தமிழினத்தின் மீது திணித்தது இந்திய வல்லரசு. இந்தியனின் உண்மை உருவம் இதனால் அம்மணமானது. கயமை எழுதிய காப்பியம்தான் இந்தி(ய) இலங்கை ஒப்பந்தம் என்பது விளங்கியது.

இந்து மாகடலில் தான்தான் பெரிய கொம்பன் என்பதை இந்தியா காட்டிக்கொள்ள மட்டுமே இந்த ஒப்பந்தம் வழி செய்தது. அமெரிக்க சோவியத்து வல்லரசு வல்லூறுகளின் முகாம்கள் இதற்குக் கொம்பூதின. இந்தி(ய) வல்லரசின் நில அரசியல் நலன்களுக்குத் தமிழினத்தின் இன உரிமையும் தேசிய வேட்கையும் பலி தரப்பட்டன. ஆயினும் இந்த இழவுச் சீட்டை ஓகோவென பல தமிழகத் தலைவர்கள் பல்லிளித்து வரவேற்றனர். தமிழ் எதிரி இராசீவுக்கு சாமரம் வீசி மேடை கட்டினர். இந்தி(ய)ன் தமிழனுக்குப் போட்டுள்ள அடிமை விலங்குகளுக்கு காவல் தெய்வங்களாகிப் போன இந்தத் தலைவர்கள், தமிழீழத்தின் மீது இந்தியா நடத்திய படையெடுப்பை வாயார வாழ்த்தி வரவேற்றனர் ஆயினும், இந்த இந்தியச் சூழ்ச்சிகளையும் அடிமைச் சீட்டுகளையும் தமிழினம் இனியும் ஏற்கப் போவதில்லை என்னும் முனகல் ஒரு புரசொலியாக வளர்ந்து வருகிறது.

பிரித்தாள்வதில் வல்லவன் இந்த இந்தி(ய) ஆளவந்தான். இவனுடைய 'இரா' (RAW) உளவு அமைப்பு தமிழீழப் போராளிகள் எல்லாம் ஒன்றுபடமால் செய்வதற்கு வேண்டிய அத்தனை சூழ்ச்சிகளையும் அழகாகச் செய்து வந்தது. நண்பனைப் போல் நடித்து வந்த இந்தியன் போராளிகளிடம் உள்பகை என்னும் நஞ்சை ஊட்டினான். தமிழனைக் கொண்டே தமிழனை அழிக்க சூழ்ச்சிகள் பல செய்தான். தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தை மட்டும் தனிமைப்படுத்தி அழிக்கப் பார்த்தான். இந்த நிலையிலாவது, தத்தம் மனக் கசப்புகளையும் காழ்ப்புகளையும் மறந்து தமிழீழப் போராளிகள் எல்லாம் போர்க்களத்தில் ஒனறுபட மாட்டாரோ என்ற ஏக்கம் நம்மை ஆட்கொள்வது இயல்பு.

யாழ்ப்பாணத்தைப் பிடிக்கப் புறப்பட்டுள்ள இந்தியப் படைகள் சிங்கள இனவெறியர் இழைத்த கொடுமைகளை மிஞ்சப் பார்க்கின்றன. பெரிய பீரங்கிகளையும் டாங்கிகளையும் வைத்து மக்களடர்ந்த யாழ்ப்பாணத் தெருக்களைத் தரைமட்டமாக்கிப் பொதுமக்களின் உயிர்களை வேட்டையாடத் தொடங்கியுள்ளன. தமிழீழத் தமிழரின் தேசிய விடுதலைப் போரில் இன்று ஒரு திருப்பு முனை! யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டுள்ள இந்தி(ய) வல்லரசின் கூலிப்படைகள் செம்மையாக அடி வாங்கி வருகின்றன. தமிழரின் வீரம் இன்று உலகரங்கில் மீண்டும் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை இந்தி(ய) வன்படைகள் பிடித்துவிடலாம். ஏன், தமிழீழத்தையே இந்தி(ய) வல்லரசு பிடித்துக் கொண்டு விடலாம். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சிங்களக் குற்றவாளிகளின் குடும்பங்களைக் கொண்டு போய் ஈழத்தின் கிழக்கில் குடியேற்றி வடக்கையும், கிழக்கையும்

ஒரேயடியாகப் பிரிக்கிற சூழ்ச்சிக்கு இந்தியா துணை போகலாம். ஆனுல், தமிழீழத் தமிழரின விடுதலேத் தாகம் மட்டும் தணியாது பூதமென வளர்ந்து அது வானளாவிவிடும். தமிழீழத்தை இதனுல் மற்ரேர் இலெபனுனகவோ அயர்லாந்தாகவோ ஆக்கிய பழி இந்திய வல்லரசைத்தான் சாரும். தமிழீழம் இந்திய வல்லரசுக்கு மீள முடியாத ஒரு புதை சேறு என்பதைக் காலம் கட்டாயம் காட்டும்.

தமிழ் நாட்டுத் தமிழருக்கும் கூட இத்தமிழீழ விடுதலேப் போராட்டம் ஒரு பெரிய பள்ளியாகும். தமிழனுக்கு "இந்தியன்" என்னும் பொய்ப் பெயரைச் சிலர் சூட்டினர். வேறு சிலர் "திராவிடன்" என்னும் முக்காட்டைப் போட்டனர். தமிழினம் ஒரு தனித்தேசிய இனம் என்பதை இவ்வாறெல்லாம் மறைத்துக் கெடுத்துத் தமிழகத்தில் மாற்ருர்தாம் வளமுற்றனர். தமிழர்களைச் சொந்த நாட்டிலேயே கூலிகளாகவும் அடிமைகளாகவும் செய்ய வந்து குடியேறிய அயலார் செய்த சூழ்ச்சிகளுக்கு நாம் இரையானேம். இந்தப் பொய்களிலிருந்து நாம் விடுபட்டாக வேண்டும். தமிழீழ விடுதலேப் போராட்டம் காட்டுகின்ற விடுதலே நெறிதான் தமிழகத் தமிழினத்திற்கு ஒரு விடிவெள்ளி என்பதை உணர்வோம்!

தமிழகத் தமிழர்களும் இந்திய வல்லரசின் அடிமைப் பிடிகளிலிருந்து விடுபெற வேண்டும். இறைமை உரிமையுடைய தமிழக மக்கள் குடியரசாகத் தாய்த் தமிழகம் மலர துமுக்கி ஏந்திப் போராட வேண்டும். இந்த வழிதான் தமிழீழத் தமிழர்களுக்கு நாம் காட்டுகின்ற உண்மையான ஆதரவாக இருக்கும். இதனுல்,

'இந்திய வல்லரசே, தமிழீழத்தைவிட்டு வெளியேறு! இந்திய வல்லரசுதான் தமிழினத்தின் முதல் எதிரி!'

என விண்ணதிர முழங்குவோம்!

தமிழ்த் தேசிய மாணவர் பேரவை.

அடிமையைப் முறிப்போமே!

எளிய மக்களை ஏறி மிதிப்பதை
எதிர்த்துக் குரலெழுப்பினேம் — அந்தக்
குரலே நெரிக்கிற
அரசின் முதுகினில்
ஒளிந்து திரிந்தோமே — இந்த
உண்மை உணர்ந்தோமா?
எரிகிற வீட்டினில்
சுருட்டுப் பிடிக்கிற
'நீரோ' மன்னர்களாய்
வாழ்ந்து மடிவதை — நாம்
ஆழ்ந்து நினைப்போமே,
அடிமை முறிப்போமே!

— பறம்பை அறிவன்

மலர்ந்திடும் தமிழ் நிலம்!

(பாவலர். ப. எழில்வாணன்.)

தனித்தனி எனவுழல் தமிழரே!
தணிந்தினி இருத்தலும் உயிரழிவே!
அணியெனப் புறப்பட வருகவே!
அதிர்ந்தெழு மறவரே அரியினமாய்!

பொறுத்தது; பிணியினுள் விழுந்தது;
பொசுங்கிய தனைத்தையும் விடுத்திடுவோம்!
வெறுத்தினி எழுகவே! மனத்தினில்
விசும்பினை நிகர்த்திடும் உணர்வுடனே!

மொழியினில் உணர்வினில் குறையென
மொழிந்திடும் பழிமொழி ஒழிந்திடவே,
விழியினும் உயிரினும் பெரிதென
விரும்பிடும் தமிழினே வளர்த்திடுவோம்!

அடிமையும் மிடிமையும் நமக்கென
அறைந்தவர் குழியினுள் விழுந்திடவே
வெடியெனக் கிளர்ந்தெழு! நொடியினில்!
வெறித்திடும் பகையினைப் பொசுக்கிடு-
[வோம்!

தனியினம் தமிழினம் உயிரினம்;
தனக்கெனத் தனிநிலம் அமைத்திடுமே!
பிணியினி அதற்கிலே! துடித்தெழு!
பிணைந்திடு! படையினுள் தமிழ்மகனே!

பிறமொழித் துணையுடன் அடக்கிடும்
பிடியினைத் தகர்த்திடு துணிவுடனே!
அறமினித் துயின்றிட வழியிலே;
அழிவுகள் ஒழிந்திடும், விடிவிதுவே!

இரும்பினை நிகர்த்திடும் மனமுடன்
இருந்திடும் தமிழனே! விழித்தெழுக!
கரும்பினை வெறுத்திடும் கயவரைக்
கனித்தமிழ் உணர்வெழத் திருத்திடுவோம்!

'**தமிழ்நிலம்**' மலர்ந்திட உழைத்திடும்
தனிநிகர் மறவரை வளர்த்திடுவோம்!
அமிழ்தினும் உயர்வென அதனினை
அகத்தினில் கருதுக! மலர்ந்திடுமே!

உயிரினைப் பெரிதெனக் கருதியோ
உரிமையை இழந்தனை! தமிழ்மறவா!
உயிரினித் துரும்பெனக் கருதியே
உரிமையை அடைந்திட துணிந்தெழுக!

சிறுத்தையின் சினத்தொடு புறப்படு!
சிறியவர் குணமெலாம் பொடிப்பொடியே!
மறத்தமிழ் உணர்வினை வெளிக்கொணர்!
மலர்ந்திடும் '**தமிழ்நிலம்**' நொடிப்-
[பொழுதே!

Scanned with CamScanner

பறம்பை அறிவன் பக்கம் !

1. நேற்றும் இன்றும்!

தமிழன் நேற்றும் இன்றும் அடிமை. நாளை அவன் உரிமையுள்ள மாந்தன். இதனை நாம் கனவாகக் கொண்டுள்ளோம். இக் கனவை நனவாக்க நேற்றைய கொடுமைகளை உணர்ந்து இன்று நடத்தும போராட்டப் படிப்பினையிலேயே, வெற்றியிலேயே நாளை நமதாதல் இயலும்!

தமிழகத்தில் வி. என். சானகி முதலமைச்சர் ஆனார். ஒரு பெண் முதல்வர் முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று பெருமை பேசுகின்றனர். ஆனால், அவர், வீரப்பனின் ஏற்பாடு என்கின்றனர். ஆண்களின் கட்டாயத்தில் பெண்கள் செயல்படுவதாகக் கூறுவதை முறியடிக்கும் பொறுப்பு, வி. என். சானகிக்கும் உள்ளது. அரசியல் செப்படி விரகில் ஆட்டப்படும் தமிழகமக்கள், உண்மையான அரசியல் தெளிவைப் பெற்றாலன்றி அவர்களுக்கு விடுதலை இல்லை!

நாம், நம்மில் அறிவார்ந்தவர் என்று கூறிக் கொள்ளும் அரசு ஊழியர், ஆசிரியர் முதலானவர், புதிய முதல்வர், என்ன 'நன்கொடை' அறிவிப்புச் செய்வார்; ஊதிய உயர்வுக்குத் திட்டமிடுவார் என்ற கவனத்திலேயே பெரும்பாலும் இருப்பதைக் காண்கின்றோம். அரசியல் மாற்றம் பொறுத்தவரை இவர்களின் எதிர்பார்ப்பு இங்ஙனமே முடிவுறுகின்றது!

நம் உழைப்பு, விலையேற்றம், வட்டி, வீண் செலவினால் பயனற்றுப் போவதை நாம் அறிந்தும், அறியாதவர்போல உள்ளோம்! நம் கண்ணெதிரே, நம்மைச் சுரண்டும் பேர்வழிகள், வளமான வாழ்க்கை பெற்றிருப்பதன் காரணத்தை அறிந்து, துணிந்து எதிர்க்கும் ஆற்றலற்றவராய் வாழ்கிறோம். இதற்கான் அணியும் வேண்டும்; துணியும் எண்ணமும் வேண்டும்!

அரசின் 'கொள்கைகள்' சலுகை யறிவிப்புகளாக உள்ளன எனில், அவற்றைக் கைப்பற்றும் செல்லப்பிள்ளைகளாக உயர் அதிகார வகுப்பு உள்ளது. இதன் சில்லறைத் தனங்களில் சிக்கிச் சிறிய சிறிய போராட்டங்களில் மக்கள் திசைதடுமாறிக் கிடக்கின்றனர்!

தமிழினத்தவரே, நம் விடியல் நம் கைகளிலேயே உள்ளது. அதனைத் தொலைத்துத் தேடிக் கொண்டிருக்கிறோம்! விடியலைக் கண்டடைய நம்மாலேயே இயலும். அதனைப் பெற அணியமாவோம்!

2. துக்கம்!... ஒரு காட்சி (show) நாடகம்!

துக்கம் ஒரு காட்சிப் பொருளாகி விட்டது. திரைப்படம் நடகம் போல வாழ்க்கை முறையிலும் துக்கம் — துயரம் — காட்சிப் பொருளாகி உள்ளது. சந்தைத் தெருக்களில், தொழுநோயரும், உறுப்புக்குறைப் பட்டவரும் இரந்து கூவும் காட்சிகளை நாம் அரசியலிலும் காண்கிறோம். துயரச் சாவு அரசியலில் விலை பேசப்படுகின்றது. தொண்டர்களிடம் பரிவுகளை ஏற்படுத்தி, அவற்றை மக்கள் நாயகத்தின் பேரில் ஒப்போலை சீட்டுகளாக மாற்றிவிடுவதைக் காண்கின்றோம்!

நேரு, இந்திரா, மா. கோ. இரா இறப்புச் செய்திகளை நினைத்துப் பார்த்தால், துக்கம் ஒரு காட்சிப் பொருளாக வளர்ந்து வந்திருப்பது புலப்படும்.

பி. இராமமூர்த்தி இறந்தார். அவர்க்குத் 'தேசியவிடுமுறை' இல்லை. மா. கோ. இராவிற்கு இந்திய அரசு தேசிய விடுமுறை விட்டது. ஒரு நாள் விடுமுறை, இந்தியா முழுவதும் துக்க அறிவிப்பானது!

தமிழகமோ, ஏழு நாள் துக்க அறிவிப்புச் செய்தது! ஆனால், மக்களிடம் அவர்தம் 'துக்க நாளை' விடாமல் நினைவுபடுத்தி வருகின்றனர். இவர்கள், குறிப்பாக அரசு அதிகார ஊழியப் பிரிவினரே ஆவார்கள்!

ஏழுநாள் துக்கம் முடிந்தது. வி. என். சானகியும் பதவியேற்றுவிட்டார். அதற்குப் பிறகும் 'துக்க ஊர்வலம்' 'இரங்கல் தீர்மானம்'! ஏன் இவர்கள் துக்கம், போலிமையானதாகி வெறும் காட்சி - கண்கட்டு வேடிக்கையாகி வருகின்றது!

சோவியத்து நாட்டில் மிக உயர்பதவியுள்ளவரின் சாவினை நினைவு கூர ஒரு நிமையம் போதுமானதாக உள்ளது! வள்ளுவரின் 'நெருநல் உளனொருவன் இன்றில்லை,' என்ற நிலையாமையைப் புரிந்து கொண்டோமில்லை!

தலைமைகளின் பிரிவை, அவற்றின் தொண்டியக்கத்தைத் தொடர்வதன் மூலமே சரிக்கட்டுதல் முடியும். இதனை அனைத்துத் தரப்புக்காரரும் சிந்தித்துணர்தல் நல்லது!

3. பெரியார் பாதை பற்றி...

சிந்தனையைப் பெரியார் நிறுத்திக் கொண்ட போது பகுத்தறிவுலகம் வருந்திற்று. ஆனால், அவர் சிந்தித்த இயக்கவியலைப் புரிந்து கொண்டு நடைபோடுகிறது. அதன் வெளிப்பாடாகப் பெரியார் சமவுரிமைக் கழகம், தமிழின விடுதலைக் கழகம், பெரியாரியக்கம், உலகத் தமிழின முன்னேற்றக்கழகம், எனத்தோன்றிவரும் அமைப்புகள் புதிய விளைவுக்கான வித்திடும் எனலாம்!

பெரியார், மார்க்சை விடத் தமிழ் மண்ணைப் புரிந்து கொண்டிருந்தார் எனலாம். மார்க்சிய வெளிச்சம், பெரியார்க்கு இயங்கும் துணிச்சலைத் தந்திருத்தல் வேண்டும். மக்களிடையே வேர்விட்டுள்ள பெரியாரியல் கருத்துகள் மார்க்சிய ஆய்வு முறைக்குரிய மதிப்பீடுகள் எனலாம்!

Scanned with CamScanner

(முன் பக்கத் தொடர்ச்சி)

பெரியார், புதிய மக்களமைப்பைக் கட்டப் பழைய கருத்துருவங்களைத் தகர்த்தழிக்கப் போரிட்டவர்! அரசு பற்றியும், பாட்டாளிய ஆட்சி பற்றியும் பெரியார் கொண்டிருந்த கருத்துகள், காரல் மார்க்சின் மெய்ம்மத்திற்கு மாறுபட்டவை ஆகா. அவை, மண்ணின் மணம், மக்களின் மனம் கொண்டவையும், கொள்ளத் தக்கவையும் ஆகும்!

பெரியார் தம்மை 'ஓர் அழிவு வேலைக்காரன்' என்றே அறிவித்துக் கொண்டார். சீர்திருத்தம் செய்வதில், இம் மக்கள் வாழ்வில் மாற்றம் நிகழப் போவதில்லை என்று கண்ட பெரியார், தம்மை ஒரு துணிச்சல் மிக்க அழிவுவேலைக்காரராக்கிக் கொண்டார். அவ்வேலையைத் தோள்மேல் போட்டுக் கொண்ட பெரியார் பாதையில், நடைபோட மார்க்சிய அறிவியலார் முன்வந்து கொண்டிருக்கின்றனர். இப்படிக் கூறுவதால் 'மார்க்சியம்' தாழ்ந்து விடாது. ஏனெனில், மக்கள் ஆற்றலின் வரலாற்றின் படிப்பினைகளின் சாரமாக வளர்த்தெடுக்கப்பட்ட மெய்ம்மமே மார்க்சியம்! ஆகவே, மார்க்சியத்தை நடைமுறைப் படுத்த இந்தத் தமிழ் மண்ணையும் மக்கள் தலைமையையும் பயில்வது முழு காயக் கடமையாகும்!

"எப்படி ஒரு மாந்தன் மக்களின் நலத்திற்காகவும் பாது காப்புக்காகவும் தான் அரசனுக வேண்டும் என்று கருதி ஓர் அரசமைப்பை ஏற்படுத்திப், பிறகு மக்கள் நலம் மறைந்துதான் அரசாட்சியை விரிவாக்குவதில் கவலைகொண்டு, கொலை முதலியவற்றைச் செய்து, அயல் நாடுகளைப் பிடிக்கும் கவலையில் மூழ்கியிருக்கின்ருனே, அது போலவே, மக்கள் நலத்திற்கு மதம் என்று சொல்லி மதத் தலைவனுகிய கடவுள், மகனுகி, தூதனுகி, 'அவதார'க்காரனுகி, உலகத்திலுள்ள மக்களை எல்லாம் தன்மதத்தில் சேர்க்கும் ஆசை கொண்டு, ஆள்பிடிக்கும் கவலையில் மூழ்கி இறக்கின்ருன் என்பதே மதத் தொடர்பான எனது எண்ணம் ..."

—பெரியார் 26-11-1928 சீர்திருத்த மாநாட்டுரை

அரசும், மதமும் மக்களிடமிருந்து அயன்மைப் பட்டுப் போவதைச் சுட்டிக் காட்டியுள்ள பெரியாரைத் திரையிட்டு விட்டு மார்க்சியம் வளர்தல் எங்ஙனம் இயலும்? சிந்தித்துப் பார்த்தல் நல்லது. 0

அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களைவந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக்கொள்கிருேம்.

-அமைச்சர்.

சென்னையில் எம். சி. ஆர். கோயில்!

சென்னை, அடையாறிலிருந்து 12. (கி. மீ) அயிர மாத்திரி தொலைவில் பழைய மாமல்லபுரம் சாலையில் 20 குறுக்கம் (ஏகர்) நிலப்பரப்பில், மறைந்த தமிழக முதலமைச்சர் எம். சி. ஆருக்குத் தம் சொந்தச் செலவில், தனிப்பட்ட முறையில் ஒரு **கோயில் கட்டவிருப்பதாகவும். அதில், கன்னியா**குமரியில் உள்ள விவேகானந்தர் ஊழ்க (தியான) **மண்டபம்** போல ஒன்று அமைக்கப்படும் என்றும், அம் மண்டபத்தில் ஓவிய, சிற்ப வடிவங்களில் எம். சி. ஆர். வரலாறு பொறிக்கப்பெறும் என்றும், அங்கு வந்து செல்பவர்களுக்கு நாளுக்கு ஒரு வேளை உணவு இலவயமாக வழங்கப்படும் என்றும், ஊழ்க மண்டபத்தைச் சுற்றிலும் சிறிய ஒரு நகரம் அமைக்கப்பெறும் என்றும், எம். சி. ஆர். ஊழ்க மண்டபப் பணிகள் மூலம் புதிய **எம். சி. ஆர். மதம்** பரப்பப்படும் என்றும், இப் பணிகள் வரும் மார்ச்சு மாதத்தில் தொடங்கப் பெறும் என்றும், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல், மற்றும் கழிவு நீரகற்று வாரியத் தலைவர் **சேப்பியார் (JPR) 19-1-88** அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். **'பணம் பத்தும் செய்யும்'** என்பதற்கு, இதைவிட வேறு சிறந்த எடுத்துக் காட்டு இல்லை. 0

இங்கு... நீ.

புழுவாய்த் துயர
நெருப்பில் கிடந்த
தமிழனைத் தட்டி எழுப்பிடப், பாட்டால்
புலியென்றேன்; போத்தென்றேன்;
காட்டானை யென்றேன்;
கமழக் கமழக் கனித்தமிழ் கொண்டு
பெருகிய அன்பால் அரிமா மறவேங்கை
என்றன்றி ஞாலத்துப்
போராளிக் கெல்லாம்
மிகவுயர்ந்த வீரனெனக்
போற்றிப் புகழ்ந்திட்டேன்.
செந்தமிழா இன்னும் உறக்கம் முடியலையோ
வீரம் பிறக்கிலையோ?
ஈரம் உனதினத்தின்
பாலுனக்குத் தோன்றலையோ?
ஈழம்பார்; அங்குற்ற
வீரபார்; படுங்கேட்ட
வீரக் கதைகளைச்
சின்னதென நீக்கிய
சீற்றம்காண்! நீயுமிங்கு
மாற்றம் பெறவே, நல
ஆற்றல் பெறுகவே!

— பறம்பை அறிவன்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
வரையிலான அத்தனை அடிமைகளும் நையாண்டி பண்ணியதற்குக் காரணம் விளங்குகிறதா?

அதேபோல்,

செயவர்த்தனவைக் காந்தியின் உண்மையான சீடன் என்று இந்தி(ய) நாடாளு மன்றத்திலேயே (இராசீவ்) பேச வைத்ததற்கு, செயவர்த்தன என்னும் சாத்தானின் மூக்கும் இராசீவின் "ஆத்தாளின்" மூக்கும் "ஒன்றுபோல" இருப்பது தான் காரணம் என்பதை உங்களால் இன்றுவது உணர முடிகிறதா?

அண்ணல் (!) காந்தி, உண்ணு நோன்பு இருந்த போதெல்லாம் "தாம்" மட்டும்தான் இருந்தாரே தவிரப் பிரபாகரனைப் போல் "தொண்டர்"-களை யெல்லாம் தூண்டிவிட்டதேயில்லை என்று "கருத்துக்" கூறிக் காந்தியக் குட்டையையே கலக்கிக் காட்டிய கேரளத்து மட்டையான "தீட்சிதின் திரு(ட்டு) விழிகள் பிதுங்கிப் போகும் வகையில்,

பிரபாகரனின் புலிகளிடம் அடிவாங்கிப் பல நூற்றுக்கணக்கான இந்தியப் படை வீரர்கள் பொத்துப் பொத்தென்று செத்துச் செத்து விழுந்து கொண்டேயிருக்கிறார்களே அந்தப் பிணமலைக்குள் தீட்சித்தோ அவரின் 'உற்றம் சுற்றங்களோ' தட்டுப்படுவதாக உங்களால் சுட்டிக் காட்ட முடியுமா?

கெட்டிச் சாத்தானிடம் குட்டிச் சாத்தான் செய்து கொண்ட வெட்டித்தனமான ஒப்பந்தத்திற்கு இப்படி ஒரு பழியும் அறியாத இந்தியப் படை வீரர்களின் சாவுகளுக்குக் காரணம் என்ன?

புலிகளிடம் சிங்களப் படை உதைபட்ட போதெல்லாம் அய்யோ படைத்துறைத் தீர்வு அடுக்குமா? இந்தியாவின் ஒரே நோக்கம் "அரசியல் தீர்வு" மட்டும்தான் என்று "ஓநாய் அறவுரை" செய்து புலிகளின் கருவிகளைப் பறிக்க முனைந்த இந்தி(ய) வேட்டை நாய்கள், இன்று சிங்கள வனையே நல்லவனுக்கும் அளவுக்கு ஈழமக்களைக் கடித்துக் குதறுவதும்,

அத்தகைய இழிசெயல்களை நயன்மைப் படுத்துவதற்காக, **"விடுதலைப் புலிகளைத் தீர்த்துக் கட்டும்வரை படைத்துறைத் தீர்வுதான் சரிப்படும்; அவர்களை ஒழித்துக் கட்டிய பிறகுதான் அரசியல் தீர்வு ஒத்துவரும்"** என்று பித்தலாட்டமாகப் பேசுவதும் வேடிக்கையாயில்லையா?

அன்றைக்குச் சிங்களப் படையினர் எதையெல்லாம் செய்தார்களோ, அவற்றையே இன்றைக்கு இந்தியப் படைகளும் செய்து கொண்டிருப்பதும், விடுதலைப் புலிகள் கொடுக்கும் தாக்கடிகள் வேகம் தாங்காமல் திக்குத்திணறிக் கொண்டிருப்பதும் இந்தியாவின் 76 கோடி மக்களுக்குமே வெட்கக் கேடு இல்லையா?

பெற்ற தாயின் "இழவு" வீட்டிலே பட்டம் கட்டிக்கொண்ட பெருமையைத் தவிரத் திறமை என்பது சிறிதளவும் இல்லாத "சின்னப் பேர்வழி" யான இராசீவுக்கு மட்டும், பொறுப்பு மிக்க அமைச்சகளைத் தூக்கியடிப்பதற்கும், ஆற்றல் மிக்க அதிகாரிகளையெல்லாம் நீக்கி விடுவதற்கும் "உரிமை" இருக்கும்போது,

கிழக்கு மாகாண மக்களின் நலன்கருதி, அதே பகுதியைச் சேர்ந்த பத்மநாதனுக்கே இடைக்கால அரசியல் முன்னுரிமை கொடுத்து முற்கூட்டியே வழங்கப்பட்ட பட்டியலை வலியுறுத்த ஈழ மக்களின் தலைவனுகிய பிரபாகரனுக்கு மட்டும் உரிமை இல்லை என்று மறுத்து விட்டுத் தான் எழுதிய ஒப்பந்தத்தைத் தானே மீறும் அரம்பனைப் போய் நேர்மையாளன் என்று இன்னும்கூட நம்புகிறீர்களா?

சூளைமேட்டுச் சொத்தைப்புரட்சிகர விடுதலை முன்னணி முதல் அங்கிருந்து வெளியேறி வந்த ஈழதேசிய மக்கள்நாயக விடுதலை முன்னணி வரையிலான பதவி வெறிபிடித்த அத்தனை எட்டப்பர்களையும் தூண்டிவிட்டு, அவர்களிடம் கருவிகளையும் வழங்கி, விடுதலைப் புலிகளைத் தீர்த்துக் கட்ட முயன்று தோல்வியையும் தழுவிய வெறியில்தான் இன்று இந்தி(ய)ப் படைகள் ஈவிரக்கமின்றி ஈழ மக்களையெல்லாம் வெறித்தனமாகக் கடித்து குதறுகின்றன என்பதை இன்னும் கூடவா உங்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை?

"போராளிகள்" என்று தாங்களே 'தட்டிக் கொடுத்துக்' கொள்ளும் போலிகளையும் 'ரா'வின் கைக்கூலிகளையும் நாணயமற்ற கருங்காலிகளையும் கூடப் "புலி" களுக்குச் சமமாக மதிக்க வேண்டும் என்றால், பெயர்களுக்குப் பின்னால் "காந்தி" என்று அடைமொழியிட்டுக் கொள்ளும் கொடியர்களையெல்லாம் கூட "மகாத்மாக்கள்" என்றும் "தேசத் தந்தைகள்" என்றும் பறைசாற்ற இந்தி(ய) அடிமைகள் முன்வருவார்களா?

"ஈழமக்கள் வேறு விடுதலைப் புலிகள் வேறு" என்று வெட்கம் மானமின்றிச் சப்பானில் போய்ச் வாய்ப்பறை அடிக்கும் இராசீவைப் பார்த்து இந்திய மக்கள் வேறு, இராசீவ் வேறு என்று ஈழமக்கள் கூறினால் ஒப்புக் கொள்வாரா?

"விடுதலைப் போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்ட "நேரு"கால இந்தியாவை நம்பிய "திபெத்திய" லாமாக்களே நம்பி இழிந்து போன வெட்கக் கேட்டை வெளியே சொல்ல முடியாமல் வெம்பி வெதும்பிக் கொண்டிருக்கும் போது,

விடுதலைப் போராட்டங்களில் அருமைபெருமைகளை அறவே உணராத இராசீவின் "டூன் பள்ளிப் பிள்ளை"களையும், அந்தப் பிள்ளைகளுடன் கொட்ட

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)
போய் விட்டீங்களா?'' என்று அழுது நடித்திருக்கிறார்... ஆக கடந்த பத்தாண்டுக் காலமாகச் சாம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்காரர்களின் நாடாக தமிழ்நாடு இருந்திருக்கிறது.

— கலைஞர் கருணாநிதி.

தமிழ்நாட்டுக்குக் கேடான விளைவு!

சானகி அம்மாள் முதல் அமைச்சர் பதவி ஏற்ற பிறகு, நான் தில்லியில் இருந்தேன். இந்திரா பேராயக் கட்சியின் பொதுச் செயலாளர் கே. என். சிங்கைச் சந்தித்தேன். அவர் ஆட்சியைக் குறுக்கு வழியில் பிடிக்க அனைத்து முயற்சிகளையும் செய்தார். இது தமிழ் நாட்டுக்கே மிகக் கேடான விளைவுகளை ஏற்படுத்தும்.

—சிவாசி கணேசன் அறிக்கை.

கோடி கோடியாய், சானகியிடத்தில்!

எம். சி. ஆருக்குத் தெரியாமல் சானகி கோடி கோடியாகப் பணம் சேர்த்திருக்கிறார். இவருக்கு அத்தனைப் பணம் எப்படிக் கிடைத்தது. தமிழ் நாட்டில் உள்ள பெரிய சாராயப் புள்ளி ஒருவரிடம் 1986 - ஆம் ஆண்டு வருமான வரி அதிகாரிகள் ஆய்வு நடத்தினார்கள். அப்போது அங்குக் கணக்குக் காட்டப்படாமல் பல கோடி உருபா பணம் கிடைத்தது பக்கத்திலேயே ஒரு குறிப்புச் சுவடி கிடைத்தது. அதில் அப்பணம் சானகிக்குச் சொந்தமானது என்று தெரிய வந்தது. அதுபற்றி அவரிடம் கேட்கப்பட்டது. அவரும் தம் பணம்தான் என்பதை ஒப்புக் கொண்டார். அந்தப் பணம் எப்படி வந்தது என்று அதிகாரிகள் கேட்டார்கள். எம். சி. ஆர். பெயரில் மருத்துவக் கல்லூரிகட்டப் பொது மக்கள் கொடுத்த பணம் என்று கூறியிருக்கிறார். இந்தப் பணம் அவருக்கு எப்படி வந்தது? இவர் நடிகை செயந்தி என்பவரின் விட்டைத் தம் பெயரில் வாங்கியிருக்கிறார். இதெல்லாம் எம். சி. ஆர். இருக்கிற போதே அவருக்குத் தெரியாமல் நடந்தவை.

— செயலலிதா பேச்சு. பிப். 6. 'மாலை முரசு.'

சூர்ப்பநகை!

அ. தி. மு. க. வில் சிறுமைக்குணம் கொண்ட சிலர், 'சிருங்காரி' ஒருத்தி தலைமையில் வெளியேறிய பின்பும் இந்த இயக்கம் பழுதுபடவில்லை. 'சண்டாளி' 'சூர்ப்பநகை' சண்டை மூட்டி விட்டாற் போல் பேராயக் கட்சிக்கும், எங்களுக்கும் உள்ள உறவு அறுந்தது. அ. தி. மு. க. வைப் பிளக்க நினைத்த முளி 'அலங்காரி' 'அகங்காரி'யின் தலைமையில் இயங்குவதாக விளக்கம் அறியாத — சிலர் 'விபரீதம்' விளையாட்டு எனக் கருதுகிற சிலர் சொல்லி வருகின்றனர்.

— கா களிமுத்து. முன்னாள் அ. தி. மு. க. அமைச்சர்

இரண்டகமா, இல்லவே இல்லை!

அண்ணா மறைவுக்குப் பிறகு கருணாநிதி எப்படித் தலைவர் பதவியை உருவாக்கிக் கொண்டாரோ, அதே போல, எம். சி. ஆர். மறைவுக்குப் பிறகு, எம். சி. ஆர். விரும்பாத தலைவர் பதவியை சானகி அணியினர் உருவாக்கிக் கொண்டுள்ளனர்...... பணம், வன்முறை, அரசியல் அதிகாரம் உள்ளிட்ட வற்றைப் பயன்படுத்தியதுதான் சானகி கூட்டம் ஆட்சியிலிருந்து போகக் காரணமே தவிர, இதில் எங்கள் இரண்டகமோ, இந்திரா பேராயத்தின் இரண்டகமோ இல்லை.

— திருநாவுக்கரசு — முன்னாள் அமைச்சர். 0

10-ஆம் பக்கத் தொடர்ச்சி)
மடிக்கும் சிறுக்கன் சிறுக்கிகளையும் மட்டுமே ''அரசியல் மேதைகளாக'' ஏற்றுக் கொண்டுள்ள இன்றைய இந்தியாவை நம்பினால் ஈழத்தமிழர்கள் உருப்பட முடியுமா?

பூமாலை நடவடிக்கை என்ற பெயரில் ஈழ மண்ணுக்குள் இந்தி(ய) வேட்டை நாய்கள் நுழைந்து கொண்டதே இன்னும் ஏழாண்டுகளுக்கு அங்கேயே தங்கியிருந்து ஈழமக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் சூழ்ச்சித்திட்டத்தின் ஒரு கட்டந்தான் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகிவிடவில்லையா?

ஈரானிலிருந்து இந்தியாவுக்கு 'ஏதிலி'யாக வந்து நுழைந்த பெரோசு ''காந்தி''யின் மகனான இராசீவுக்கு, இந்தியாவின் தலைமையமைச்சராகும் உரிமையும் அவருடைய இறக்குமதி இல்லத்துணையான சோனியாவுக்கு இந்தியமண்ணின் பட்டத்தரசி போல் உலாவரும் பெருமையும் இருக்கும் போது, ஏழேழு தலைமுறைகளாக இலங்கையிலேயே பிறந்து வளர்ந்து அந்த மண்ணை வளப்படுத்திச் சிங்களர்களையும் நிலைப்படுத்திய (அந்த மண்ணின் மக்களாகிய) மலையகத் தமிழர்களுக்கு மட்டும் அந்த மண்ணில் குடியுரிமையில்லை என்று ஒப்புக் கொள்வதுதான் ''இராசீவ் — செயவர்த்தன சூழ்ச்சி ஒப்பந்தத்தின்'' 15 — டி பிரிவு என்பது உங்களுக்கு தெரியுமா?

இலங்கையும் இந்தியாவைப்போல் ஒரே(?) நாடு என்றும், சிங்களவர்களுக்குத் தமிழர் பகுதிகளில் குடியேற உரிமை உண்டு என்றும், வாய்த் தம்பட்டம் அடிக்கும் இந்தியாவின் முதல் குடிமகனாகிய பட்டுக்கோட்டை வெங்கட்ராமனுக்கு இந்தியாவின் ஒரு பகுதியாகிய காசுமீரில் நிலம் வாங்க உரிமையில்லை என்பதும், காசுமீரின் பருக் அப்துல்லாவின் வால் பட்டுப், பட்டுக் கோட்டையிலும் நிலம் வாங்க முடியும் என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Scanned with CamScanner

(11- ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய ஒருமைப்பாட்டின் தகுதி(!)ப் பாடே இப்படியிருக்கும்போது, இலங்கையின் ஒருமைப் பாட்டைக் காக்கப் புறப்பட்டுவிட்டேன் என்று வெட்கம் மானமின்றி அங்கே நுழைந்து துமுக்கிக் கட்டையால் மொத்துப் படுவதுடன் அமையாமல் எட்டி எட்டி உதைக்கும் செயவர்த்தனேயின் இடது கால் கட்டைவிரலை வருடிவிட்டுக் கொண்டிருக்கும் இழி செயலுக்கு **அரச தந்திரம்** என்று பெயரா, **அடிவருடித்தனம்** என்று பெயரா, அல்லது **பேடித்தனம்** என்று பெயரா, இல்லை **பேதைத்தனம்** என்று பெயரா? அப்படிப்பட்ட இழி பிறவிக்கு **மானமுள்ள தமிழர்களையும்** சேர்த்து **'ஆளத்'** தகுதி இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

ஒருமைப்பாட்டால் பெருமைப்பாடு கொண்டுள்ள இந்தியாவின் ஒரு பகுதியாகிய அசாம் மாநிலத்தில் இந்தியப் பெண்களிடமே இந்தியப் படைகள் ஆடிய அருவருக்கத்தக்க வெறியாட்டங்களைப் பற்றிய அடுக்கடுக்கான செய்திகள் அண்மையில் கூட வெளிவந்தன என்னும் உண்மை உங்களுக்குத் தெரியுமா?

தங்களின் சொந்த மண்ணிலேயே இந்த அளவுக்கு இழிவாக நடந்து கொள்ளும் இந்தியப் படைகள் ஈழமக்களிடம் எப்படி எப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

நம்பி நம்பி நசிந்து போகின்ற தமிழ்நாட்டு மக்களே! செயல்கள் ஆக வேண்டும் என்றால், தாயே மகனை காட்டிக் கொடுக்கவும், மகனே தாயைக் கூட்டிக் கொடுக்கவும் கூச்சப் படாத பிறப்பிலேயே "இழிந்து பிறந்த" கும்பல்களுக்கெல்லாம் கொத்தடிமைகளாகிச் செத்துக் கொண்டிருப்பதை விட, மானத்தோடும், வீரத்தோடும் போராடித் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போல் பெருமைச் சாவு சாவது தான் மேலானது என்பதை நீங்கள் இன்னும் கூட உணரவில்லையா?

தனக்கு ஏற்பட்டுள்ள **பீரங்கி ஊழல் கொள்ளைக்காரன்** என்னும் பெயரை மறைப்பதற்காகத் **தமிழீழத்தின் கொலைகாரனாக** மாறியிருக்கும் இராசீவின் தலைமை நமக்குத் தேவையா?

அமைதிப்படை என்னும் பெயரால் தமிழீழத்தின் மீது படையெடுத்துச் சென்றுள்ள இந்தியக் கூலிப்படை அங்கிருந்து வெளியேற வேண்டும்.

தமிழீழம் என்பது தமிழர்களின் பிறப்புரிமை!
அதனை மறுப்பவன் நமக்கு முதல் எதிரி!

போலி ஒருமைப்பாடுகளைப் புறக்கணிப்போம்!
கொத்தடிமைத் தனங்களிலிருந்து விடுபடுவோம்!
தமிழர்களின் தாகம் **தனித் தமிழீழம் — தனித் தமிழ் நாடு!**

வெற்றி நமதே

பாவலர் **மகிபை பாவிசைக்கோ.**

0

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 18

ஞ்சகமும் ஊழலும் சூழ்ச்சியுமாக இயங் ய கும்பல் பிளவுண்டால், அத் தீய, ரவான செயல்கள் வெளிப்பட்டே தீரும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 100.

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்:

திரு. / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5

TN/MS (C) 657